வகுப்பு : 9

தேர்வு எண் 9 1 3 4

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

நேரம் : 3.00 மணி]

## சமூக அறிவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I

**I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக.** 14x1=14

1. வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்
   அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம் இ) புதிய கற்காலம் ஈ) பெருங்கற்காலம்
2. சுமேரியரின் எழுத்து முறை -------- ஆகும்.
   அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக் இ) சோனோகிராம் ஈ) க்யூனிபாரம்
3. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை யாது?
   அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி இ) தமிழ் – பிராமி ஈ) கிரந்தம்
4. மகாவீரரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மகத அரசர் ---------
   அ) தனநந்தர் ஆ) சந்திரகுப்தர் இ) பிம்பிசாரர் ஈ) சிசுநாகர்
5. மும்மணிகள் (திரிரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதித்தவர் --------
   அ) புத்தர் ஆ) மகாவீரர் இ) லாவோட்சே ஈ) கன்ஃபூசியஸ்
6. பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு ----------
   அ) புவிமேலோடு ஆ) கவசம் இ) கருவம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
7. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன், இந்தியா -------- கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
   அ) கோண்டுவானா ஆ) லாரேஷியா இ) பாந்தலாசா ஈ) பாஞ்சியா
8. ------ ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் நிலத்தோற்றம் ஆகும்.
   அ) துள்ளல் ஆ) வண்டல் விசிறி இ) டெல்டா ஈ) மலை இடுக்கு
9. வளிமண்டலத்தில் கீழாக உள்ள அடுக்கு ------------ ஆகும்.
   அ) கீழடுக்கு ஆ) மீள் அடுக்கு இ) வெளியடுக்கு ஈ) இடையடுக்கு
10. குடவோலை முறையை பின்பற்றியவர்கள் --------
    அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள் இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள்
11. அழுத்தக் குழுக்கள் எனும் சொல்லினை உருவாக்கிய நாடு
    அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து
    இ) முன்னாள் சோவியத் யூனியன் ஈ) இந்தியா
12. சார்க் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று
    அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) சீனா ஈ) பூடான்
13. மூன்றாம் துறையில் அடங்குவது ----------
    அ) போக்குவரத்து ஆ) காப்பீடு இ) வங்கியல் ஈ) அனைத்தும்
14. புவியின் குளிர்ச்சியான பல்லுயிர்த் தொகுதி
    அ) தூந்திரா ஆ) டைகா இ) பாலைவனம் ஈ) பெருங்கடல்கள்

பகுதி – II

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**28– வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 10x2=20

15. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு.
16. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் – விவரி
17. அஜாதசத்ருவைப் பற்றிக் கூறு?
18. புனித சோபியா ஆலயம் பற்றிக் கூறு.
19. புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
20. ஆழிப்பேரலைகள் என்றால் என்ன?
21. பசிபிக் நெருப்பு வளையம் பற்றி குறிப்பு எழுதுக.
22. வானிலைச் சிதைவு – வரையறு.
23. வளிமண்டலம் வரையறு.
24. நீரியல் சுழற்சி என்றால் என்ன?
25. நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சியினை வேறுபடுத்துக.
26. அரசியல் கட்சி என்பதன் பொருளை விளக்குக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

27. குழந்தைகளையும், 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களையும் ஏன் பணிக் குழுக்களாகக் கருதக்கூடாது?
28. பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன?

## பகுதி – III

III. எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 
42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10x5=50

29. நிரப்புக.
   i) எகிப்தியர்கள் தொடக்க காலத்தில் பயன்படுத்திய உருவ எழுத்துகள் சார்ந்த முறை ---------
   ii) சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ------- ஆவார்.
   iii) இந்தியாவில் ------- கட்சி முறை பின்பற்றப்படுகிறது.
   iv) இந்தியாவில் அதிக கல்வியறிவு பெற்றுள்ள மாநிலம் ---------
   v) பொதுத்துறை என்பது --------

30. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i) | கோடாரிக் கருவிகள் | எகிப்திய அரசர் 2 |
| ii) | பாரோ | முதல் தீர்த்தங்கரர் 1 |
| iii) | கல்வெட்டியல் | பாதுகாக்கப்பட்ட நகரம் 5 |
| iv) | ரிஷபர் | கல்வெட்டுக் குறிப்புகளை ஆராய்வது 3 |
| v) | அக்ரோபொலிஸ் | அச்சூலியன் 4 |

31. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i) | கிளையாறு | – சிமா 2 |
| ii) | கவசம் | – ஆற்றின் மூப்பு நிலை 1 |
| iii) | காற்று மோதாப் பக்கம் | – பசிபிக் பெருங்கடலின் ஆழமான பகுதி 4 |
| iv) | மரியானா அகழி | – காற்றின் வேகம் 5 |
| v) | காற்று வேகமானி | – மழை மறைவுப் பகுதி 3 |

32. வேறுபடுத்துக.
   i) இன்சல்பர்க் மற்றும் யார்டங்
   ii) வானிலை மற்றும் காலநிலை

   காரணம் கூறுக.
   i) தீப்பாறைகள் முதன்மைப் பாறைகள் அல்லது தாய்ப்பாறைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.
33. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது – தெளிவுப்படுத்துக.
34. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளும், வேறுபாடுகளையும் எழுதுக.
35. எரிமலைகளால் உண்டாகும் விளைவுகள் யாவை?
36. வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.
37. சூழ்நிலை மண்டலத்தின் செயல்பாடுகளை எழுதுக.
38. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
39. அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் யாவை?
40. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின.
41. பொதுத்துறையும், தனியார் துறையையும் வேறுபடுத்துக.
42. புதுப்பிக்க தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்க தகாத வளங்கள் – வேறுபடுத்துக.

## பகுதி – IV

IV. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்: 2x8=16

43. சிந்துவெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.
44. அ) உலக வரைபடத்தில் கீழ்கண்டவற்றை குறிக்கவும்.
   i) பசிபிக் நெருப்பு வளையம்
   ii) புவி அதிர்ச்சி மண்டலம் (ஒன்று)
   iii) செயல்படும் எரிமலைகள் (ஒன்று)
   iv) இமயமலைத்தொடர்
   v) குளிர்பாலைவனம் (ஒன்று)
   vi) ஏதேனும் ஒரு டெல்டா
   vii) பிரெய்ரி
   viii) இந்தியா

(அல்லது)

   ஆ) தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்கண்டவற்றை குறிக்கவும்.
   i) மதுரை
   ii) சென்னை
   iii) உறையூர்
   iv) கன்னியாகுமரி
   v) அரபிக்கடல்
   vi) காஞ்சி
   vii) இந்தியப் பெருங்கடல்
   viii) நாகப்பட்டினம்



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com